# PART-A

## கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்விற்கான பாடத்திட்டம்

## (கொள்குறி வினா வகைக்கான தலைப்புகள்)

### பத்தாம் வகுப்புத் தரம்

### பகுதி-அ

### இலக்கணம்

1. பொருத்துதல் – பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல், புகழ் பெற்ற நூல், நூலாசிரியர்.
2. தொடரும் தொடர்பும் அறிதல் (i) இத்தொடரால் குறிக்கப்படும் சான்றோர் (ii) அடைமொழியால் குறிக்கப்படும் நூல்.
3. பிரித்தெழுதுக.
4. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.
5. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.
6. பிழைதிருத்தம் – சந்திப்பிழையை நீக்குதல், ஒருமை பன்மை பிழைகளை நீக்குதல், மரபுப் பிழைகள், வழூஉச் சொற்களை நீக்குதல், பிறமொழிச் சொற்களை நீக்குதல்.
7. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.
8. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்.
9. ஓரெழுத்து ஒரு மொழி உரிய பொருளைக் கண்டறிதல்.
10. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.
11. வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயரை உருவாக்கல்.
12. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்.
13. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குதல்.
14. பெயர்ச் சொல்லின் வகை அறிதல்.
15. இலக்கணக் குறிப்பறிதல்.
16. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
17. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

18. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.

19. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.

20. எதுகை, மோனை, இயைபு இவற்றுள் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெழுதுதல்.

21. பழமொழிகள்.

## பகுதி-ஆ
## இலக்கியம்

1. திருக்குறள் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், தொடரை நிரப்புதல் (இருபத்தைந்து அதிகாரம் மட்டும்)
   அன்பு, பண்பு, கல்வி, கேள்வி, அறிவு, அடக்கம், ஒழுக்கம், பொறை, நட்பு, வாய்மை, காலம், வலி, ஒப்புரவறிதல், செய்நன்றி, சான்றாண்மை, பெரியாரைத் துணைக் கோடல், பொருள்செயல்வகை, வினைத்திட்பம், இனியவை கூறல், ஊக்கமுடைமை, ஈகை, தெரிந்து செயல்வகை, இன்னா செய்யாமை, கூடா நட்பு, உழவு.

2. அறநூல்கள் – நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழிநானூறு, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஔவையார் பாடல்கள் தொடர்பான செய்திகள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பிற செய்திகள்.

3. கம்பராமாயணம், இராவண காவியம் தொடர்பான செய்திகள், பாவகை, சிறந்த தொடர்கள்.

4. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், அடிவரையறை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் உள்ள பிற செய்திகள்.

5. சிலப்பதிகாரம்- மணிமேகலை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறந்த தொடர்கள், உட்பிரிவுகள் மற்றும் ஐம்பெரும் – ஐஞ்சிறுங் காப்பியங்கள் தொடர்பான செய்திகள்.

6. பெரியபுராணம் – நாலாயிர திவ்வியப்பிரபந்தம்– திருவிளையாடற் புராணம் – தேம்பாவணி – சீறாப்புராணம் தொடர்பான செய்திகள்.

7. சிற்றிலக்கியங்கள்:
   திருக்குற்றாலக்குறவஞ்சி – கலிங்கத்துப்பரணி – முத்தொள்ளாயிரம், தமிழ்விடுதூது – நந்திக்கலம்பகம் – முக்கூடற்பள்ளு – காவடிச்சிந்து – முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் – இராஜராஜ சோழன் உலா – தொடர்பான செய்திகள்.

8. மனோன்மணியம் – பாஞ்சாலி சபதம் – குயில் பாட்டு – இரட்டுற மொழிதல் (காளமேகப்புலவர்) அழகிய சொக்கநாதர் தொடர்பான செய்திகள்.

9. நாட்டுப்புறப்பாட்டு – சித்தர் பாடல்கள் தொடர்பான செய்திகள்.

10. சமய முன்னோடிகள் – அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், குலசேகர ஆழ்வார், ஆண்டாள், சீத்தலைச் சாத்தனார், எச்.ஏ.கிருட்டிணனார், உமறுப்புலவர் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புப் பெயர்கள்.

## பகுதி-இ
## தமிழ் அறிஞர்களும், தமிழ்த் தொண்டும்

1. பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகனார் தொடர்பான செய்திகள், சிறந்த தொடர்கள், சிறப்புப் பெயர்கள்.

2. மரபுக் கவிதை – முடியரசன், வாணிதாசன், சுரதா, கண்ணதாசன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி தொடர்பான செய்திகள், அடைமொழிப் பெயர்கள்.

3. புதுக்கவிதை – ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, தருமு சிவராமு, பசுவய்யா, இரா.மீனாட்சி, சி.மணி, சிற்பி, மு.மேத்தா, ஈரோடு தமிழன்பன், அப்துல்ரகுமான், கலாப்ரியா, கல்யாண்ஜி, ஞானக்கூத்தன்– தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புத் தொடர்கள் மற்றும் எழுதிய நூல்கள்.

4. தமிழில் கடித இலக்கியம் – நாட்குறிப்பு, ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, மு.வரதராசனார், பேரறிஞர் அண்ணா தொடர்பான செய்திகள்.

5. நிகழ்கலை (நாட்டுப் புறக் கலைகள்) தொடர்பான செய்திகள்.

6. தமிழில் சிறுகதைகள் தலைப்பு – ஆசிரியர் – பொருத்துதல்.

7. கலைகள் – சிற்பம் – ஓவியம் – பேச்சு – திரைப்படக்கலை தொடர்பான செய்திகள்.

8. தமிழின் தொன்மை – தமிழ்மொழியின் சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்.

9. உரைநடை – மறைமலை அடிகள், பரிதிமாற்கலைஞர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.பி.சேது, திரு.வி.கல்யாண சுந்தரனார், வையாபுரி, பேரா.தனிநாயகம் அடிகள், செய்குதம்பி பாவலர் – மொழிநடை தொடர்பான செய்திகள்.

10. உ.வே.சாமிநாதர், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், சி.இலக்குவனார் – தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்.

11. தேவநேயப்பாவாணர் – அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்.

12. ஜி.யு.போப் – வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டு சிறப்புத் தொடர்கள்.

13. தந்தைபெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்துராமலிங்கர் – அம்பேத்கர் – காமராசர் – ம.பொ.சிவஞானம் -காயிதேமில்லத் – சமுதாயத் தொண்டு.

14. தமிழகம் – ஊரும் பேரும், தோற்றம் மாற்றம் பற்றிய செய்திகள்.

15. உலகளாவிய தமிழர்கள் சிறப்பும் – பெருமையும் – தமிழ்ப் பணியும்.

16. தமிழ் மொழியின் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான செய்திகள்.

17. தமிழ் மகளிரின் சிறப்பு – மூவலூர் ராமாமிர்தம்மாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், வேலு நாச்சியார் மற்றும் சாதனை மகளிர் – விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பங்கு – தில்லையாடி வள்ளியம்மை, ராணி மங்கம்மாள், அன்னி பெசன்ட் அம்மையார்.

18. தமிழர் வணிகம் – தொல்லியல் ஆய்வுகள் – கடற் பயணங்கள் – தொடர்பான செய்திகள்.

19. உணவே மருந்து – நோய் தீர்க்கும் மூலிகைகள் தொடர்பான செய்திகள்.

20. சமயப் பொதுமை உணர்த்திய தாயுமானவர், இராமலிங்க அடிகளார், திரு.வி.கல்யாண சுந்தரனார் தொடர்பான செய்திகள்– மேற்கோள்கள்.

21. நூலகம் பற்றிய செய்திகள்.